கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

பங்குனி மாத இதழ்
NEWS BULLETIN
MARCH 2024
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
2002 முதல் 22 ஆண்டு களாக	கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக பாடசாலை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 38-44 Binley Road, Coventry CV3 1JA எனும் முகவரியில் நடைபெற்று வருகின்றது

SATURDAY	Time
Tamil	9.50am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	1.00pm – 4.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	1.00pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 4.00pm
SUNDAY	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 2.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	10.00am – 2.00pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	10.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	10.00am – 2.00pm
Tamil	10.00am – 12.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D)	10.00am – 12.00am





தமிழ்த் திறன் போட்டியின் கட்டுரைப் போட்டி முடிவுகள்

9-11 வயதிற்குட்பட்டோர்

1ம் இடம் - செல்வி கவிநயா சுரேஸ்தாஸ்
2ம் இடம் -செல்வன் லிங்கா சர்வானந்தலிங்கம்
-செல்வன் லக்ஸன் திருவரங்கன்
3ம் இடம் - செல்வி திவ்யா நக்கீரன்

11-13 வயதிற்குட்பட்டோர்

1ம் இடம்- செல்வன் மதீரன் சௌந்தரராஜன்
2ம் இடம்- செல்வன் மதீபன் சௌந்தரராஜன்

. பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் கௌரவிப்பு விழா.

பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையினால் ஆண்டுதோறும் நடாத்தப்பட்டு வருகின்ற தமிழ்மொழிப் பரீட்சையின் நான்கு திறன்களான பேசுதல், கேட்டல், வாசித்தல், எழுதுதல், போன்றவற்றில் தோற்றி, சித்திபெற்று, தங்கம், வெள்ளி, மற்றும் வெண்கலப் பதக்கங்களைத் தமதாக்கிய மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா இம்முறையும் கொவன்றியில் 02/03/2024 அன்று முஸ்லிம் சமூக நிலையத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ரக்பி தமிழ்மொழி அழகியல் கற்கைகள் நிலைய நிர்வாக இயக்குனர் திருமதி சசிரேகா மலரவன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், இலண்டனுக்கு வெளியேயுள்ள பல தமிழ்ப் பாடசாலைகள் கலந்துகொண்டு பதக்கங்களைப் பெற்றதோடு, கலைநிகழ்ச்சிகளையும் வழங்கியிருந்தன.

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்மொழிக் கலைக்கழகத்தின் 73 மாணவர்கள் அன்றைய நிகழ்வில் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.



நிகழ்வில், கொவன்றி தமிழர் நலன்பரிச் சங்கத்தின் தலைவர் மதிப்புக்குரிய திரு கந்தையா அரியரத்தினம் ஐயா அவர்கள் மங்கள விளக்கினை ஏற்றி வைத்ததோடு, வரவேற்புரையையும் வழங்கி இருந்தார்.

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் சார்பில், சிரேஷ்ட உபதலைவரும் தமிழ் ஆசிரியையுமான திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன், கனிஷ்ட உபதலைவர் திரு விவேகானந்தம் விஜயரூபன், தலைமை ஆசிரியை திருமதி ரஜனி உதயசேகரன், தமிழ்ப் பாடசாலைப் பொறுப்பாளர்களில் ஒருவரான திரு வள்ளி ரவீந்திரன் ஆகியோர், பதக்கங்களையும், சான்றிதழ்களையும் மாணவர்களுக்கு வழங்கிக் கௌரவித்தார்கள்.



கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மாணவர்கள் கலைநிகழ்ச்சிகளையும் வழங்கியிருந்தார்கள். செல்வி கவிநயா சுரேஸ் தாஸ் அவர்கள் அழகிய பேச்சினையும், பழைய மாணவியும் சுரத்தட்டு ஆசிரியையுமான "கலாஜோதி" செல்வி ஸ்ரெ.ஃபனி லோரன்ஸ், பழைய மாணவியும், வீணை, வயலின் ஆசிரியையுமான "கலாஜோதி" செல்வி வாரணி சரவணதாஸன் ஆகியோரின் மாணவர்களான செல்வி பிரதிகா செல்வகுமார், செல்வி வர்ஷிதா ஜெயசங்கர், செல்வன் சஜித் கேதீஸ்வரன், செல்வன் அனுஜன் ஜெயசங்கர், செல்வன் விஷால் காண்டீபன், ஆகியோர் இணந்து வழங்கிய வாத்திய இசைநிகழ்வுக்கு, மிருதங்க ஆசிரியர் "வாத்திய சுதாகர" திரு மயில்வாகனம் விஜயராஜா அவர்கள் மிருதங்க இசையை வழங்கியிருந்தார்.



கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகத்தின் நடன ஆசிரியைகளான "பரதக்கலா வித்தகர்" "கலைமானி" "நாட்டியக் கலாநிபுணா" ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன், "நுண்கலைமானி" "நாட்டியக் கலாநிபுணா" ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் ஆகியோரின் மாணவிகள் நடன நிகழ்வுகளை வழங்கியிருந்தனர்.

செல்விகளான லினிஷா மணிகண்டன், மாதுகை மயூரன், ஜனுஜா அகிலன், ஸகஸ்ரா பாபு, ஒகஸ்ரா றொபேட், வர்ஷிதா ஜெயசங்கர், சஹானா இராகுலன், இதயநிலா இதயகுமார், கிருஷிகா பாபு, இதயவேணி இதயகுமார் ஆகியோர் "உலகமெலாம் பருவமழை..." என்ற பாடலுக்கு நடனத்தை வழங்கியிருந்தனர்.



செல்விகளான ஜெனிஷ்கா சிவா, ஜெயர்த்திகா ஜெயதீஸ்வரன், வைஷாலி காண்டீபன், கௌரிஸ்ரீ கலாதரன், தனிஷ்கா சிவா, ஆரதி சியாமளன், அபிநயா ரமணன் ஆகியோர் "வாழ்க நிரந்தரம்" என்ற பாடலுக்கு வரவேற்பு நடனத்தை வழங்கியிருந்தனர்.



செல்விகளான ஜெனிஷ்கா சிவா, ஆரதி சியாமளன், அபிநயா ரமணன், வைஷாலி காண்டீபன் ஆகியோர் காவடி நடனத்தை வழங்கியிருந்தனர்.



புலமதில் ஏகினாலும் தந்நலம் கருதாது, பல வளங்களை ஒன்றாக்கி, உளமாறச் சேவைதனை உவந்தளித்து வரும் பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் விருது வழங்கும் நிகழ்வினை, கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மாணவர்கள் செல்வி நேருஷா கேதீஸ்வரன், செல்வன் அட்சயன் ஆலவன், ஆகியோரும், திரு ஸ்ரீ.பகீரதன் அவர்களும் தொகுத்து வழங்கியிருந்தனர்.



கராத்தே போட்டி

இலண்டனில் நடைபெற்ற கராத்தே போட்டியில், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மாணவர்களான செல்வி அனுசியா பீரிஸ், செல்வன் ஜகீஸ் கஜேந்திரன், செல்வன் அர்ஷென் விசயரூபன், செல்வன் ருஷாந் பீரிஸ் ஆகியோர் கலந்துகொண்டு வெற்றிபெற்று, வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களைத் தமதாக்கியிருந்தார்கள். இவர்களுக்கும், இவர்களைப் பயிற்றுவித்த கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக கராத்தே ஆசிரியரும் தமிழ்ப் பாடசாலையின் பொறுப்பாளர்களில் ஒருவருமான திரு பிரதீபன் பீரிஸ் அவர்களுக்கும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் தனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.











மகா சிவராத்திரி

சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாம் சிவபெருமானை நினைத்து வழிபடுகின்ற விரதமானது சிவராத்திரி எனப்படும். கொவன்றீஸ்வரத்தில் நடைபெற்ற சிவராத்திரி நிகழ்வில் கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகத்தின் நடன ஆசிரியைகளான "பரதக்கலா வித்தகர்" "கலைமானி" "நாட்டியக் கலாநிபுணா" ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன், "நுண்கலைமானி" "நாட்டியக் கலாநிபுணா" ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் ஆகியோரின் மாணவிகள் நடன நிகழ்வுகளை வழங்கியிருந்தனர்.



செல்விகளான லினிஷா மணிகண்டன், மாதுகை மயூரன், ஜனுஜா அகிலன், ஸகஸ்ரா பாபு, ஒகஸ்ரா றொபேட், வர்ஷிதா ஜெயசங்கர், சஹானா இராகுலன், இதயநிலா இதயகுமார், கிருஷிகா பாபு, இதயவேணி இதயகுமார் ஆகியோர் நடனத்தை வழங்கியிருந்தனர்



செல்விகளான ஜெனிஷ்கா சிவா, வைஷாலி காண்டீபன், கௌரிஸ்ரீ கலாதரன், தனிஷ்கா சிவா, ஆரதி சியாமளன், அபிநயா ரமணன் ஆகியோர் நடனத்தை வழங்கியிருந்தனர்.




செல்விகளான ஜெனிஷ்கா சிவா, ஆரதி சியாமளன், அபிநயா ரமணன், வைஷாலி காண்டீபன் ஆகியோர் காவடி நடனத்தை வழங்கியிருந்தனர். எல்லாம் வல்ல சிவனின் அருட்கடாட்சம் எல்லா உயிர்களுக்கும் கிடைக்கட்டும்.

ஈஸ்ரர் பண்டிகை

ஈஸ்ரர் என்ற வார்த்தை, கிரேக்க மொழி மற்றும் கிரேக்க மதத்திலிருந்து வந்தது ஆகும். இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் அவருடைய உயிர்த்தெழுதலும் பற்றியதான பின்னணிதான் புனித வெள்ளி (சிலுவையில் உயிர் தியாகம் செய்த நாள்) மற்றும் ஈஸ்ரர் (மூன்றாம் நாள்) உயிர்த்தெழுந்த நாளை குறிக்கிறது.



Adchayon's poem:



அமைதி

அமைதியே!
உனக்கொரு வேண்டுகோள்...
உனக்கும் மனிதன் மீதான பல மோகங்கள்
மனித முகங்களில் சலனமும் இருக்கும்
உன் முகங்களிலோ மருந்து மயமே இருக்கும்

மனித தேவத்திற்கு...
அணு ஆயுதங்கள் வேண்டாம்
தேப்பாக்கி சத்தம் வேண்டாம்
இரண்டு மழையும் வேண்டாம்

அமைதியே!
உன் முகமான யுத்த அமைதியை தா...

மனித நெஞ்சங்களே!
மதங்களைத் தாண்டி மனிதனை வாழுங்கள்
இனவேற்றுமை இல்லாவுலகில் வாழுங்கள்
ஆறுகளாய் தோன்றி அன்புடன் வாழுங்கள்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற
தமிழ் தத்துவத்தை மனிதர்களே உணருங்கள்

அமைதியே!
உன்னை உணர்ந்த மனித நெஞ்சங்களுக்கு
வாழ்வதற்கு தேவையான
உன் முகமான மன அமைதியை தா.

ஆ. அட்சயன்
வகுப்பு 11

தாய்மொழி தினக் கவிதைப் போட்டி

கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகத்தில் பாலர் முதல் உயர்தரம் வரை தமிழைப் பயின்று கொண்டிருப்பதோடு, பல



கலைநிகழ்ச்சிகள் மூலம் தனது திறமைகளையும் வெளிப்படுத்தி வரும் செல்வன் அட்சயன் ஆலவன் அவர்கள் தனது ஆங்கிலப் பாடசாலையான Warwick School (Private) இல் நடைபெற்ற தாய்மொழி தின கவிதைப் போட்டியில் பங்குபற்றி, தமிழ்மொழியில் கவிதை எழுதி வெற்றி பெற்றுத் தமிழின் பெருமையை நிலைநாட்டியுள்ளார்.

அட்சயனுக்கு கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் தனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

ஈழத்துப் புலமைகள் (பாகம் 18)

கடந்த இதழிலே!
யாழ்ப்பாணம் தென் கோப்பாய்,இருபாலையில் வாழ்ந்த புலவர்
நெல்லை நாக நாதமுதலியார் பற்றிப்பார்த்திருந்தோம்.!!
இவ்விதழிலே!
புலவர் நெல்லை நாக நாத முலியார் அவர்களின் புதல்வரும் சிறந்த
பன்மொழி வித்தகரும் புலவருமாகிய இருபாலை சேனாதிராய
முதலியார் பற்றிப்பார்ப்போம்.
இவர் தமது தந்தையாரிடத்தும், கூழங்கை தம்பிரானிடத்தும்,மாதகல்
சிற்றம்பலப்புலவரிடத்தும் இலக்கண இலக்கியங்களை
கற்றுத்தேர்ந்தவர்.ஆங்கிலம்,மற்றும் போர்த்துகீசிய மொழிகளிலும்
கற்றுத்தேர்ந்தவர்.நீதிமன்றத்திலே நீதிபதியின்
செயலாளராகவும்,மொழிபெயர்ப்பாளராகவும் கடமையாற்றி பின்பு
கோப்பாய் தாசில்தாராகவும் கடமையாற்றியவர்.அக்காலத்திலே
அதிகாரம் மிக்கவராகவும்,செல்வச்செழிப்பு,சைவசீலம் மிக்கவராகவும்
வாழ்ந்தவர்.
இவர் பல புகழ்மிக்க வித்துவான்களுக்கு பாடங்கற்பித்த வித்துவ
சிரோமணியாக் போற்றப்பட்டவர்.
இவரிடம் கற்றுத்தேர்ந்த விதுவான்கள் வரிசையில்
சிலரைப்பார்த்தாலே ,இவரது புலமையை உணரலாம்.அதில்
சிலரைப்பார்ப்போம்.
நல்லூர் சரவணமுத்து புலவர், தென்கோவை
அம்பலவாணபண்டிதர்,நீர்வேலி பீதாம்பரப்புலவர்,நல்லை நகர்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் போன்றோரும்.சில ஆங்கிலேயர்களும்
இவரிடம் தமிழ் கற்றுக்கொண்டதாகஅறியவருகிறது.அக்காலத்தில்
யாழ்ப்பாணத்தில் இவராலேயே தமிழ் விருத்தியடைந்ததாக கூறுவர்.
நல்லூர் கந்தசுவாமி கோவிலிலே முதன் முதலில் புராணபிரசங்கம்
செய்தவரும் இவரே.இவருக்குப்பின் இவரது மாணவர்
சரவணமுத்துப்புலவரும் அவருக்குப்பின் சேனாதிராய
முத்லியாரதும் சரவணமுத்துப் புல்வரதும் மாணவராகிய ஆறுமுக
நவலர் பிரசங்கம் ஆற்றியதாக அறியக்கிடைகிறது இவர் நல்லூர்
கந்தசுவாமி மீது மிகுந்த பக்தியுடையவர்.அதனல் அவர் மீது நல்லை
வெண்பா,நல்லையந்தாதி, நல்லைக் குறவஞ்சி போன்ற
பிரபந்தங்களும்,நீராவிப்பிள்ளையார் மீது ஓர் கலிவெண்பாவும்,பல

தனிக்கவிகளும் பாடியுள்ளார்.மாவிட்டபுரம் கந்தசுவாமி மீது ஊஞ்சல்
பதிகங்களும் வேறுபல தல்ங்கள் மீது ஊஞ்சல் பதிகங்களும்
பாடியுள்ளார்.இவற்றுள் நல்லை வெண்பா பாடங்கேட்டுப்படிப்போரால்
பலவாறு திரித்து எழுதப்பட்டு,மாற்றமடைந்து சிதறிய
நிலையில்,இருந்ததை அவரது மாணாக்கர் அம்பலவாண பண்டிதரால்
திருத்தி அச்சிடப்பட்டது.அதில் ஒரு பிரதி யாழ்ப்பாண நூலகத்தில்
வைக்கப்பட்டிருந்தது அதுவும் பின் நாளில் எரித்து
அழிக்கப்பட்டுவிட்டது.அன்னாரின் கவிச் சிறப்புணர்ந்து ஒரு
வெண்பா பார்ப்போம்;

நல்லை வெண்பா

கந்துமுகந தானைவேற் காளையருங் கன்னியரும்
கந்து முகந் திக்களிகூர் நல்லூரே- சந்திர மா
மாவைப் பிழந்தார் மகிழ்பூப்ப வீரையிலோர்
மாவைப் பிழந்தார் மனை.

இவ்வெண்பாவிலே ழ கரமும் ள கரமும் ஒற்றுமைகருதி பிழத்தல்
எனக்கூறப்பட்டுள்ளது.ஆனால் இது இலக்கண வழுவமைதி எனும்
நன்னூலார் சூத்திரத்தினடிப்படையில் ஏற்றுக்கொள்ளக்கூடியதே.

(இவரது சில வெண்பாக்களையும்,தனிக்கவிதைகளையும் அடுத்த
இதழிலே ஒப்பீட்டளவில் காண்போம்)

தொடரும்.

ஆக்கம் - ஆசிரியர் மாணிக்கம் தவத்துரை